# DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

## MCOP. No. 57/2020

Deposition of Witness : PW1

Name - செல்வி. ஜெயப்பிரியா Father's Name - சுருளிராஜ்

Village\City - Taluk-

Caste - Calling -

Religion - Age-

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.07.2023.

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

2 ம் எ.ம.கு.வி.:

கேள்வி : நீங்கள் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : நீங்கள் விபத்தை நேரடியாக பார்க்காததால் விபத்து யாருடைய கவனக்குறைவால் எவ்வாறு நடைபெற்றது என்ற விபரம் உங்களுக்கு நேரடியாகத் தெரியாது என்றால்?

பதில் : நேரடியாகத் தெரியாது. ஆனால் பார்த்தவர்கள் என்னிடம்சொன்னார்கள்.

கேள்வி : விபத்து சமயத்தில் உங்கள் தகப்பனாருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : விபத்து சமயத்தில் உங்கள் தகப்பனார் செல்லதக்க ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும் சாலை

விதிகளை பின்பற்றாமல் சென்றதால் தான் மனு விபத்து ஏற்பட்டது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : முதல் விசாரணையில் உங்கள் தகப்பனாருக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளீர்கள் என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : உங்கள் தகப்பனார் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்று சொன்னால்?

பதில் : சரியல்ல

கேள்வி : விபத்து சமயத்தில் உங்கள் தகப்பனார் மோதிய லாரியின் ஓட்டுநர் கவனமாகவும், மெதுவாகவும் தான் லாரியை ஓட்டினார் என்றாலும், விபத்துக்கு முழு காரணம் உங்கள் தகப்பனார் தான் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் தகப்பனார் சென்ற வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : விபத்து சமயத்தில் உங்கள் தகப்பனார் தினமும் 2000 ரூபாய் வருமானம் ஈட்டினார் என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரியல்ல

கேள்வி : உங்கள் தகப்பனாரின் உடற்கூறாய்வு அறிக்கையில் வயது 52 என்று உள்ளபொழுது, கூடுதல் நஷ்டஈடு பெறுவதற்காக மனுவில் வயது 50 என்று குறைத்து போட்டுள்ளீர்கள் என்றால்?

பதில் : சரியல்ல

கேள்வி : உங்கள் தகப்பனார் விபத்து சமயத்தில் வேலைக்கு எதுவும் செல்லாமல் வீட்டு ஆளாகவே இருந்தார் என்றால்?

பதில் : சரியல்ல

கேள்வி : விபத்து சமயத்தில் உங்கள் தகப்பனாரின் வருமானத்தைச் சார்ந்து நீங்கள் மற்ற உறுப்பினர்களோ இல்லை என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : விபத்து சமயத்தில் லாரி ஓட்டுநரின் செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் என்பதற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : நீங்கள் கேட்டுக்கொண்ட நஷ்டஈட்டுத்தொகையானது மிக அதிகம் என்றும், அதனால் உங்களது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றும் சொன்னால்?

பதில்　　: சரியல்ல

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 18.07.2023 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2023.07.19 14:38:48 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
18.07.2023.